முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

## சோபகிருது வருடம் மாசி மாதம் 06 திகதி முதல்
## சோபகிருது வருடம் மாசி மாதம் 13 திகதி வரை
## (18.02.2024 ஞாயிறு முதல் 25.02.2024 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. வேலவனார் மகா சக்தியாக
   வெற்றிமுகம் தரும வழியில்
   ஞாலமதில் காட்டி அவதாரம் புரிந்த
   ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் தருமம் மெச்சி
   அருளுவேன் அகத்திய மகரிஷியும்
   வரங்களென சோபகிருது சால்திங்கள்
   வல்லமையான சஷ்டி திகதிமேல் முன்னான்கோர் திகதிவரை
3. வரை நடக்கும் வாரநிகழ்வாக
   வையகத்தில் இந்தியா தமிழகத்தில்
   வருங்கால பலனாக உரைப்பேன்
   வல்லமையான ஞான ஆட்சிக்கு
4. ஆட்சிக்கு அரங்கன் வகுத்துள்ள
   ஆன்மீக அரசியல் களம்
   ஆட்சிமுறை செய்கின்ற ஆளுமை
   அனைவருக்குமே வருங்காலமதில்
5. காலமதில் வழிநடத்தும் படியும்
   கருணைபட தருமமோடு ஆளுமை
   உலகம் ஏற்க இருக்க வேண்டும் எனும்
   உணர்வும் உண்மையும் தந்தருளும்
6. அருளில்லா பொருள் பற்றிலே
   ஆளுமையென அநீதி புரிந்தால்
   இருளில் அழிவில் விழநேருமெனும்
   இறைஞானமும் வந்தடைய நேரும்

7. நேருமையானச் சூழல் தன்னை
நிலவுலகில் விதைக்கின்ற
ஆறுமுக அரங்கன் ஞானம்
ஆளுமைகள் தனக்கு ஆற்றல்
8. ஆற்றலும் நல்ல வழிகாட்டலும்
அருளும் வண்ணமிருக்க
மாற்றம் கருதி ஆளுமைகளும்
மகத்துவம்பட அதிகாரிகளும் வந்து ஆசி
9. ஆசிபலம் தனை அடைய
அழிவிலா பெரும் பாதுகாப்பு
நேசமுடன் அடைந்து எங்குமே
நீதிநேருமை காக்கும் சக்திகளாக
10. சக்திகளாக நிலை கூடியே
சகல துறைகளும் ஞானபலமாக
பக்திமிகு சித்திமிகு ஞானஆட்சியுமாக
பாடிட இந்தியா தமிழகம் மாற்றம் பெறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் மாசி மாதம் 06ம் நாள் 18.02.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் மாசி மாதம் 13ம் நாள் 25.02.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

முருகப்பெருமானின் மகா சக்தி வடிவமாக தோன்றி தருமமே வெல்லும் என்று உலகிற்கு உணர்த்தும் வகையிலே தரும வழி நடந்து வெற்றி பெற்று உலகை காக்கவே அவதரித்து உலகை காக்கும் ஞானியே ஆறுமுக அரங்க மகா தேசிகனே உமது அளவிலாத தருமத்தை போற்றியே அகத்திய மகரிஷி யானும் சோபகிருது வருடம் மாசி மாதம் 06ம் நாள் 18.02.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் மாசி மாதம் 13ம் நாள் 25.02.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

உலகை காக்கும் வல்லமை மிக்க ஞான ஆட்சிக்கு ஆறுமுக அரங்க மகான் வகுத்தும் தொகுத்தும் அளிக்கின்ற தருமத்தை அடிப்படையாகக் கொண்ட ஆன்மீக அரசியல் களம் ஆட்சி முறைகளை ஆட்சி செய்யும் ஆளுமைகள் அனைவரும் இனிவரும் காலங்களிலே ஏற்று நடந்திடும்படி அமைப்பு உருவாகுமப்பா.

தருமநெறியே இனிவரும் காலங்களிலே இவ்வுலகை வழிநடத்தும் ஆகவே இனிவரும் காலங்களிலே கருணையுடன் கூடியதும் தருமத்தினையும் உள்ளடக்கியதும் ஆகிய ஆட்சி முறையை உலகம் ஏற்கும்படி இருக்க வேண்டும் என்கிற உணர்வையும், உண்மை நிலையையும் உலகோர்க்கு தந்தருளுமப்பா.

ஞானிகள் உலகோர்க்கு அளித்த அருள் நெறியை விட்டு அருள் இல்லாத பொருள் பற்றினை அடிப்படையாக கொண்டு செயல்படுகின்ற ஆளுமைகளாக மாறி மக்களுக்கு அநீதி புரிந்தால் அருள் இல்லாத ஆட்சி முறைகள் இருளில் வீழ்ந்து காணாமல் போய்விடும் என்கிற உண்மை அறிவும் வந்தடையும்.

ஆகவே இவ்வுலகில் நேர்மையை விதைத்து உலகினில் உண்மையும், தருமமும் மிக்க நல்லாட்சி ஞானிகள் ஆட்சியை உருவாக்கும் சூழலை உருவாக்கும் விதமாக ஆறுமுக அரங்க மகான் கனிவுடன் அருளிய தரும ஞான நெறிமுறைகள் ஆட்சியாளர்களுக்கு ஆற்றலும் நல்ல வழிகாட்டலுமாய் இருக்கின்ற படியினாலே உலகினில் நல்ல மாற்றங்கள் உருவாக்கிட வேண்டும் என விரும்பும் ஆட்சியர்களும் அதிகாரிகளும் அருள்மிகு ஞானகுரு ஆறுமுகஅரங்கமகாதேசிகனாரை வந்து தரிசித்து ஆசி பெற்று அவர்கள் எல்லாம் அழிவற்ற பெரும் பாதுகாப்பையும் பெற்று உலகினில் நேர்மையும் நீதியும் காக்கும் மகா சக்திகளாக மாறி உயர்ந்த நிலையை அடைந்து சகல துறைகளிலும் உயர்ஞானம் பெற்று பக்தி மிக்க தர்மத்தின் சக்தி மிக்க ஞான ஆட்சியினை இந்தியா தமிழகம் அடைந்து அற்புத மாற்றங்களை இந்த உலகமே காணுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–